விலை: 30.00
பக்கங்கள் - பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை (14.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

## உரும்பிராயில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் வீதி, உரும்பிராய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று இளைஞன் ஒருவர் சடலமாக மீட் 15

## உலகை அச்சுறுத்தும் ஒமிக்ரோன் திரிபினால் முதலாவது மரணம் பதிவு

(லண்டன்)
உலகை அச்சுறுத்திவரும் கொரோனாவின் புதிய திரிபான ஒமிக்ரோன் 15

## பூஸ்டர் தடுப்பூசி பெற்றவர் சில மணி நேரத்தில் மரணம்

### வவுனியாவில் சம்பவம் பரிசோதனைக்கு நடவடிக்கை

(வவுனியா)
வவுனியா, மகாஇறம்பைக் குளம் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுச் சென்ற குடும்பஸ் 15

## 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வை நிறுத்தினார் ஜனாதிபதி

### விசேட வர்த்தமானியும் வெளியானது



(கொழும்பு)
*2022ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்தினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. இது தொடர்பான விசேட வர்த்தமானியும் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.*

அரசியலமைப்பின் 70ஆவது பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இவ்வாறு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டிசம்பர் 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளு 15

## மன்னார் கடலில் காணாமல்போன வடமராட்சி மீனவர் ஒருவர் சடலமாக மீட்பு

(மன்னார்)
மன்னார் - கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் வடமராட்சியைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் நேற்று முன்தினம் காணாமல்போன நிலையில் நேற்றைய தினம் அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் 15

## அராலியில் கோவிட்டால் 3 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கோவிட்-19 நோய்த் தொற்றுக்குள்ளாகிய 3 பிள்ளைகளின் தாயார் உயிரிழந்துள்ளார். 15

## தலைமன்னார் மேற்கில் வனவளத் திணைக்களத்தின் காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு

(மன்னார்)
மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலைமன்னார் மேற்கு பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை வனவளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலை 15

## கொரோனா 27 பேர் பலி

(கொழும்பு)
ஆண்கள் 14 பேர் உட்பட நாட்டில் மேலும் 27 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக 15

## நான்காவது தடுப்பூசியும் எதிர்காலத்தில் தேவைப்படும்

### வைத்தியர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)
எதிர்காலத்தில் நான்காவது கோவிட் தடுப்பூசியையும் வழங்குவதற்கான வாய்ப்பு உள்ளதென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாள 15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி
## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில் 28.07.1946

விண்ணில் 14.11.2021

கடந்த 14.11.2021 அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் குமாரசாமி தங்கம்மா
(மயில்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப் பதால். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்கேற்பதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(9064)

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

077 414 1960

குடும்பத்தினர்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# ஆதனப் பெயர் மாற்றம்
### 10/3, சந்தை வீதி, 1ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 12

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 12 சந்தை வீதி. 1ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 10/3 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப் பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தை இராமசாமி சிவப்பிரகாசமும் பெண் இராசாத்தியம்மாவும் ஆகியவர்கள் 01.03.1932ம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் 3400ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியின் பிரகாரம் இராமசாமி சிவப்பிரகாசம் ஆகியவரின் பெற்றோரான சின்னக்குட்டி இராமசாமியினதும் பெண் அன்னமுத்துவினதும் கொள்வனவாக இருந்ததென்றும் அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே வாய்ச்சொல் மூலம் தமக்கு அளித்திருந்தார்கள் என்றும் 1955ம் ஆண்டு முதல் குறித்த ஆதனத்தில் எதுவித தங்குதடையற்ற ஆட்சியிலிருந்து வருவதாகவும் வெளிப் படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7657/ 19.01.2006ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த ஆதனத்தை வேலும்மயிலும் ஸ்ரீதரகுமாரும் பெண் குகரூபியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7659/ 19.01.2006ம் இலக்க உறுதியால் இராமசாமி சிவப்பிரகாசமும் பெண் இராசாத்தியம்மாவும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை மாருதி அமிர்தலிங்கம் சர்வலோகநாதனும் பெண் சுமங்கலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற் றப்பட்ட 2000/15.01.2020ம் இலக்க உறுதியால் வேலும்மயிலும் ஸ்ரீதரகுமாரும் பெண் குக ரூபியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

வேலும்மயிலும் சிறிஸ்கந்தராஜாவும் பெண் சுமித்திராவும், குறித்த மாருதி அமிர்த லிங்கம் சர்வலோகநாதனும் பெண் சுமங்கலாவும் ஆகியவர்கள் குறித்த 3400ம் இலக்க உறுதி சாதனத்தின் உரித்தாளர்களான சின்னக்குட்டி இராமசாமியினதும் பெண் அன்ன முத்துவினதும் பிள்ளைகள் இராமசாமி சிவப்பிரகாசமும், இராமசாமி கருணாநிதியும் என்பதுடன் அவர்களின் பெற்றோரின் இறப்பின் பின்னராக எதுவித மரணசாதனங்கள் நிறை வேற்றாமையால் இராமசாமி சிவப்பிரகாசம் குறித்த ஆதனத்தின் ஆட்சி தனக்கென்பதை வெளிப்படுத்தியதுடன் குறித்த சுமித்திராவின் தந்தை இராமசாமி கருணாநிதியின் இறப் பின்பின் குறித்த ஆதனம் குறித்த சுமித்திராவிற்கு தந்தைவழி பிள்ளைப்பங்காக வந்தடைந்த தென்றும் குறித்த ஆதனத்தில் குறித்த சுமித்திராவிற்கிருந்த உரித்துப்பங்கினை கைத்துறப் பதாக குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 2447/ 29.10.2021ஆம் இலக்கத்தில் உரிமைப் பங்கினை அழித்தல் உறுதியொன்றினை நிறை வேற்றியுள்ளார்கள்.

குறித்த மாருதி அமிர்தலிங்கம் சர்வலோகநாதனும் பெண் சுமங்கலாவும் ஆகிய வர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மாருதி அமிர்தலிங்கம் சர்வலோகநாதனும் பெண் சுமங்கலாவும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(9053)

# வடக்கில் ஆர்வத்துடன் சிங்கள மொழியை கற்கும் ஆசிரிய பயிற்சி மாணவர்களுக்கு வெகுவிரைவில் நியமனம் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரர்



இந்து பௌத்த கலாசார பேரவையால் 12.12.2021 இல் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவமானது இந்து பௌத்த கலாசார பேரவை அரங்கில் அதன் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அதிவணக்கத்திற் குரிய அத்துரலியரத்தின தேரர் தலைமையில் நடைபெற்றது. இந்தவிழாவில் பிரதம விருத்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மதிப்பிற்குரிய ட.இளங்கோவன் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக 511 ஆம் இராணுவ படைப் பிரிவின் கட்டளைத் தளபதி யூட் பெர்னான்டோ மற்றும் சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் திருமதி விக்ரர் சாந்தி கலந்து சிறப்பித்தார். அத்துடன் பாடசாலை அதிபர், பழைய மாணவர் சிலர், நிறுவன ஆசிரியர்கள், நலன்விரும்பிகளும் கலந்துகொண்டனர்.



இவ்விழாவில் ஏற்கனவே 120 மணித்தியாலங்கள் கல்வி கற்று நிறைவுசெய்து கோவிட்-19 காலத்தில் சான்றிதழ் பெறமுடியாமல் இருந்த வெளிமாவட்ட மாணவர்கள் 50 பேருக்கு விருத் தினர்களால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் விழாவில் கலந்துகொண்ட மாணவர்கள் வரவேற்புரை, சிங்கள மொழிப் பாடல்கள் மற்றும் நன்றியுரை போன்றவற்றை சிங்களத்திலும் தமிழிலும் வழங்கினார்கள்.

விழாவிற்கு தலைமைதாங்கிய அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரர் மொழியின் தன்மைபற்றியும் அதை கற்பதன் அவசியம் பற்றியும் மாணவர்க ளுக்கு எடுத்து கூறியதுடன் இந்த அரசாங்கத்தின் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் கோவிட்-19 காலத்தில் அபிவிருத்திகள் தடைப்பட்டு இருப்பதை எடுத்துக்கூறி இன்னும் இந்த அரசாங்கத்திற்கு 3 வருடங்கள் இருப்பதால் தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்றும் கூறினார். அத்துடன் விவசாயிகளுக்கு நிலங்களை வழங்கி வாய்ப்புகளை ஏற்படுத்தவும், இயற்கையை பயன்படுத்தி எரிவாயு பசளை உற்பத்தி போன் றவற்றை ஒவ்வொருவரும் சுயமாக செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தி பேசினார். அதனை தொடர்ந்து வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மதிப் பிற்குரிய ட.இளங்கோவன் அவர்கள் இந்நிறுவனத்தை தனக்கு 12 வருடங்களாக தெரியும். அரசினால் அன்று ஆரம்பிக்கப்பட்ட மும்மொழி திட்டங்களில் இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் தேசமானிய MTS இராமச்சந்திரன் இந்நிறுவனத்தினூடாக அரச பாடசாலைகளில் இலவச மொழி கற்கை நெறியை நடாத்தி எங்கள் மனதில் இடம்பிடித்துள்ளார். இந்த விடயத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புவதுடன் என்றும் இச்சேவை தொடர தன்னாலான உதவியை வழங்கு வேன் என்றும் கூறினார். அதனைத் தொடர்ந்து மாணவரால் நன்றியுரை வழங்கப்பட்டது. மேலும் எதிர்வரும் 2022 ஜனவரி முதல்வாரத்திலிருந்து ஏற்கனவே நடைபெற்ற சகல பாடசாலைகளிலும் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவை இலவசமாக கற்பிக்கப்படும் என்றும் விழாவில் அறிவிக்கப்பட்டது. விழா முடிவுற் றதும் பாராளுமன்ற உறுப்பினர் அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரர் ஆசிரிய பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் 40 மாணவர்களுக்கு நேர்முக பரீட்சை நடாத்தி அவர்கள் அனைவருக்கும் கல்வி அமைச்சின் ஊடாக ஜனவரி மாதம் ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்றும் அதற்கான நடவடிக்கையை தான் எடுத்துள்ளதாகவும் மாணவர்களுக்கு உறுதியளித்தார். ஆசிரிய பயிற்சி மாணவர்கள் அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரருடன் சிங்கள மொழியில் நேரடியாக உரையாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 12 வருடங்களில் யாழ். மாவட்டத்தில் 15000 மாணவர்களையும் வெளிமாவட்டத்தில் 8000 மாணவர் களையும் கற்பித்தமைக்கும் இதற்கான நிதி உதவியை வழங்கிய ஜேர்மனிய சட்ட நிறுவனமும் அதன் குடிவரவு, குடியகல்வு சட்டநிபுணருமான MTS இராமச்சந் திரனுக்கு நன்றி தெரிவித்தார் அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரர். வடமாகாணத்தின் 2ஆம் மொழியின் தந்தை MTS இராமச்சந்திரன் என்றால் அது மிகையாகாது என்றும் அவர் கூறினார். இந்த நேரத்தில் வரணி கரம்ப குறிச்சியிலிருந்து அதிபர் கண்ணதாசனும் அப்பாடசாலை பெற்றோரும் பாராளுமன்ற உறுப்பினர் அதிவணக்கத்திற்குரிய அத்துரலியரத்தின தேரரிடம் தங்களுக்கு ஆங்கில, சிங்கள ஆசிரியர் ஒவ்வொருவரை நிரந்தரமாக தமது பாடசாலைக்கு தருமாறு நேரில் வேண்டுகோள் விடுத்தனர்.

**தொடர்ந்தும் 2022ஆம் ஆண்டிற்கான ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் ஜனவரி முதல் வாரத்திலிருந்து சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படும். அதற்கான பதிவுகளை மேற்கொள்ள எமது தலைமை காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர்களிடம் வேண்டுகின்றோம்.**

**இந்து பௌத்த கலாசார பேரவை, தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாண மாவட்டம். - 077 271 1181**

(9058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்திற்கு வருகை தரும் சீனத் தூதுவர் கீ சென்ஹொங்

## தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கைக்கான சீன குடியரசின் தூதுவர் கீ சென்ஹொங் வடமாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விஜயத்தின் போது அவர் நாளை, நாளை மறுதினம் வடக்கில் தங்கியிருப்பார் என சீனத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்போது வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார்.

இத்துடன் கடற்றொழிலாளர்களுக்கான ஒரு தொகுதி உபகரணங்களை வழங்கும் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சீனத் தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில காலங்களில் வடக்கிலுள்ள மூன்று தீவுகள் சீனாவிடம் கையளிக்கப்பட்டவுள்ளதாக வெளியான தகவல் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் குறித்த மூன்று தீவுகளில் முன்னெடுக்கப்படவிருந்த மின் திட்டத்தை சீனா கைவிட்டுள்ள நிலையிலேயே அந்நாட்டு தூதுவர், வடக்குக்கான பயணத்தை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு குளிரூட்டி சாதனங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம் : கஜிந்தன்)

# வைரஸ் பரவலை கட்டுப்படுத்த

## பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்

### சுகாதார அமைச்சு கோரிக்கை

*(கொழும்பு)*

**கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கண்டிப்பாக மூன்றாம் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை சகலரும் பெற்றுக் கொள்ள வேண்டும். பூஸ்டர் தடுப்பூசியே உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என சுகாதார அமைச்சின் கொவிட் வைரஸ் பரவல் செயற்பாடுகளின் பிரதான தொடர்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.**

கொவிட் புதிய பிறழ்வுகள் குறித்த அச்சுறுத்தல் நிலைமைகளில் அடுத்து வரும் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போதான அரசாங்கத்தின் தீர்மானங்கள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட்-19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை, உலக நாடுகள் இன்றும் கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டே உள்ளனர். இலங்கையிலும் வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி விட்டதாகக்கூற முடியாது. ஆனால் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்வதன் மூலமாக மக்களின் உயிர் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தியுள்ளோம்.

இப்போதும் இலங்கையில் பெரும்பாலான மக்கள் இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே சகலரும் மூன்றாம் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலமாக பரவலை கட்டுப்படுத்த முடியும்.

உலக நாடுகள் இப்போது மூன்றாம் தடுப்பூசியை கட்டாயமாக்கியுள்ளனர்.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இருக்கும் ஒரே வழிமுறையாகும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆகவே இலங்கைக்கும் மூன்றாம் தடுப்பூசி அவசியமாகும் என மருத்துவர் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னாச்சி செல்லையா

*குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சி செல்லையா அவர்கள் நேற்று (13.12.2021) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்ற வைத்தி லட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கந்தர் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தராசா, காலஞ்சென்ற அன்னலட்சுமி, கருணானந்தம், பரமசிவம் (கனடா), பஞ்சலிங்கம் (கனடா), ஜெயலட்சுமி (ஆசிரியை - யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவநேசன் (சட்டத்தரணி), வசந்தி, கலாறஞ்சினி (கனடா), மாலா (கனடா), ம.சுரேஸ் (முன்னாள் பொது முகாமையாளர் - சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தபோதரன் (கனடா), ரமேஸ்தரன், கிருஷாந்தினி (கனடா), துஷியந்தன் (கனடா), கோகுலராஜ், அனுஷா, யசிதா, கஜிதா, கிந்துஷன் (கனடா), அபிநிதா (கனடா), ஆதிஸ் (கனடா), நிதுஷா, ஜலிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் அந்தராணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு.** **077 329 4731** **077 375 4243** **தகவல்: குடும்பத்தினர்**

31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி **ஜெயரதி தவராசா** அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் தங்கம்மா குமாரசாமி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-3247)

**ஆசிரியர் கழகம்**
**யா/ அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 15.11.2021 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் சந்திரகாந்தி கருணாவதி (மலர்)

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (13.12.2021) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.12.2021) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(5906)

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் இருந்து தொலைபேசி மூலமாக இரங்கல் தெரிவித்தோருக்கும் வயாவிளான் முகப்புத்தகம் ஊடாக அஞ்சலி தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பருத்தித்துறை வீதி, வாரான்பற்றை லேன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.** **077 464 1519** குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கபடிப் போட்டி
## யாழ்.மாவட்ட பெண்கள் அணி சம்பியன்



வடமாகாண பெண்களுக்கான கபடிப் போட்டியில் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி யாழ்.மாவட்ட பெண்கள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.

இரு அணிகளும் தமது அனுபவம் வாய்ந்த ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டனர்.

இதனால் இரு அணிகளின் புள்ளிகளும் அண்மித்தவாறே சென்றது.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி 46:40 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.(6-90)

# அடிலெய்டு டெஸ்டில் ஹசில்வுட் விலகல்




அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

2 ஆவது டெஸ்ட் நாளை மறுதினம் அடிலெய்டில் தொடங்குகிறது. இந்த போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெற இருக்கிறது.

பிரிஸ்பேன் டெஸ்டின் போது அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் ஹசில்வுட்டுக்கு இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் 4ஆவது நாள் ஆட்டத்தின்போது அவர் ஆறு ஓவர்கள் மட்டுமே வீசினார். இந்த நிலையில் பிரிஸ்பேன் டெஸ்டில் ஹசில்வுட் விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக ஜை ரிச்சர்ட்சன் அல்லது மைக்கேல் நேசர் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது. பகல்-இரவு டெஸ்டில் ஹசில்வுட் 32 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். (6)

# பார்முலா-1 கார்ப்பந்தயம்
## ரெட்புல் வீரர் வெர்ஸ்டபேன் சம்பியன்



நடப்பு ஆண்டுக்கான பார்முலா-1 கார்ப்பந்தயத்தின் இறுதிச் சுற்றில் முதலிடம் பிடித்ததன் மூலம் ரெட்புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் முதல் முறையாக சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா-1' கார்ப்பந்தயம், 22 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்று ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் இறுதி சுற்றான அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ், யாஸ் மெரினா சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 306.183 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

இதில் ரெட்புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் 17.345 விநாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார்.

2.256 விநாடிகள் பின் தங்கிய நிலையில், மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹெமில்டன், இரண்டாவது இடத்தையும் 5.173 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பெர்ராரி அணியின் வீரரான கார்லோஸ் செய்ன்ஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

இதுவரை நடைபெற்று முடிந்த அனைத்து சுற்றுகளின் முடிவில், ரெட்புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் 10 வெற்றிகளுடன் 395.5 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை வென்றார். (6)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2468 facebook

### குமுதினி

மன்னா புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருகிறதாம்



என்ன மீண்டும் தாயக்கட்டைக்கு வேலை வந்து விட்டதா

### பார்த்தீபன்



ஒரு பைக் இருந்தா பல பொண்ணு கிடைக்குமே




பொண்ணு எங்கம்மா கிடைக்குது கீழ விழுந்து கை, காலெல்லாம் புண்ணு தான்மா கிடைக்குது

### கௌசல்யா

ஆத்தா, நம்ம ஊருக்கு அமீர்கான் வந்துருக்காராம்.....



ராசா... அது அமீர்கான் இல்லய்யா.... ஒமிக்ரோன்

### பிறேம்குமார்



பால் ஊருக்குள்ளே ஒரே மழையா இருக்கு ஓவர்... ஓவர்



எவ்ளோ மழையா இருந்தாலும் பரவாயில்லை வேலைக்கு வந்து சேரு ஓவர் ஓவர்

### காயத்திரி




வாத்தியாரே உனக்கு வயசு ஆகிருச்சு நீ ரெஸ்ட் எடு இனி நான் பார்த்துக்கிறேன்

### விபுஷனா

9 am குட்மோர்னிங் செல்லம் சாப்பிட்டியா?
சோறு சாப்பிட்டேன்
1 pm என்ன பண்ற செல்லம்?
சோறு சமைக்கப் போறேன்
3 pm ஏதாச்சும் கிப்ட் வேணுமா செல்லம்?
சோறு வாங்கி தர்ரியா....



அட போடி சோத்துக்கு செத்தவளே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

14.12.2021
கார்த்திகை 28, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.43 மணிவரை
அச்சுவினி முழுவதும்
சுபநேரம் 10.51-12.21 மணிவரை
இராகுகாலம் 3.21-4.51 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தரம்
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

**மேஷம்**
கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்**
வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர் கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக் கிடைக்கும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும், செயற்பாடுகளில் உற்சாகம் கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி**
குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகள் கண்டு கூறலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங் கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளால் பெருமையுண்டு.

**மகரம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**கும்பம்**
பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**
இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

உன்னையே நீ ஆளாதவரை இந்த உலகை நீ ஆளப்போவதில்லை

## அதிக விலையில் விற்பனையாகும்

# மண்ணெண்ணெய் அடுப்புக்கள்

## திண்டாடும் பொதுமக்கள்

**(கொழும்பு)**

**சந்தைகளில் இதுவரை காலமும் ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த மண்ணெண்ணெய் அடுப்புகளின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.**

வர்த்தக நிலையங்களில் உரிமையாளர்கள் ஒரு மண்ணெண்ணெய் அடுப்பை 6 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாட்டின் ஆங்காங்கே சமையல் எரிவாயு கொள்கலன்கள் வெடித்த சம்பவங்களை அடுத்து, மக்கள் எரிவாயு அடுப்புக்கு மாற்றாக மண்ணெண்ணெய் அடுப்புகளை பயன்படுத்தி சமைக்க ஆரம்பித்துள்ளனர்.

சில வர்த்தகர்கள் தாம் எண்ணிய விலையில் மண்ணெண்ணெய் அடுப்புகளை விற்பனை செய்வது மிகவும் அநீதியானது என மக்கள் விசனம் வெளியிட்டனர்.

தம்மை மிகவும் அசௌகரியத்திற்கு உள்ளாக்கி, அதிக விலையில் மண்ணெண்ணெய் அடுப்புகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# 3 வாரங்களுக்குள் கடும் பஞ்சம் ஆளும் தரப்பு எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடுமையான பஞ்சம் ஏற்படக்கூடிய நிலை உருவாகலாம் என ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய அரச சேவை சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் இந்த நிலை ஏற்படலாம்.

அத்தோடு அடுத்த சில வாரங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படலாம் என்றும் தெரிவித்தார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்.
**திருமதி. சறோஜினிதேவி சிவஞானம்**



வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் திரு.சி.கஜேந்திரன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி.சறோஜினிதேவி சிவஞானம் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மாகாண கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.
(C-3250)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி.**பூமணி பொன்னுத்துரை**



எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி.யசோதரா விக்னேஸ்வரமூர்த்தி அவர்களின் அன்புத்தாயார் திருமதி.பூமணி பொன்னுத்துரை அவர்கள் 13.12.2021 நேற்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
(C-3245)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வழங்க விரும்பும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாற்றுத்திற னாளிகளுக்கான தொழிற் சந்தை நிகழ்வு இடம் பெற வுள்ளது.

இந்நிகழ்வில் நிறுவன ங்களில் கடமையாற்றக் கூடிய வலுவுள்ள தொழில் தேடும் மாற்றுத் திறனாளிகள் கல ந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத் தின் அனைத்துப் பிரிவு களிலிருந்தும் கலந்து கொள்ளவிருக்கும் இவர்க ளுக்கான தொழில் வாய்ப்பு க்களை வழங்குவதற்கு பல நிறுவனங்கள் தொழில் நிலையத்தினில் பதி வுகளை மேற்கொண்டுள்ளன.

இவர்களுடன் இணை ந்து மேலும் தொழில் வாய் ப்புக்களை வழங்குவதற்கு ஆர்வமுள்ள நிறுவனங்கள் எதிர்வ ரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியா கவோ அல்லது 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசியூடாகவோ பதிவினை மேற்கொள் ளவும். நடைபெறவிருக்கும் தொழிற்சந்தையில் கலந்து கொண்டு மாற்றுத் திறனா ளிகளின் தொழில் ஆர்வ த்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான தொழில் களை வழங்கி அவர்களை ஊக்குவிக்குமாறு யாழ். அரச அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார். (5)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் நடத்திய இரத்ததான முகாம் நேற்று முன்தினம் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை ஐயப்பன் கோயில் அருகாமையில் அமைந் துள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)

# வாள் வெட்டுக்குழு வீடு புகுந்து அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட சங்கானை பகுதி யில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த வாள்வெட்டுக் குழு அங்கு அட்டகாசம் செய்துள்ளது. இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் வீட்டின் கதவுகள், முச்சக்கர வண்டி, மீன் தொட்டி, தண்ணீர் குழாய், கதிரைகள் மற்றும் வேலி தகரங்கள் என்பவற் றினை வாளினால் வெட்டி சேதப்படுத்தி யுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (5-6-33-104)



யாழ்.மாவட்ட மனித வலு வேலைவாய்ப்புத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தொழிற்சந்தை கடந்த சனிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (படம்- ரவிசாந்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)


உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக் கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண் டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி புளியம்பொக்கணை சந்தி செல்வ விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்தராசக் குருக் களின் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம் பெறும். (5)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொரு ளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த பகுதி யில் சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம் இடம் பெறு வதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பகு தியை முற்றுகையிட்ட போது சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிலோ கஞ்சா மற்றும் 10 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (5-6-104)



# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய் யப்பட்டதும் உரிமை கோரப் படாததுமான சான்றுப் பொரு ட்களான மணல், துவிச்சக்கர வண்டிகள், கோயில் பித்த ளைப் பொருட்கள், மரத்தினா லான நாய் வாகனம், மின் சாதனப் பொருட்கள் மற்றும் பல பொருட்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய் யப்படவுள்ளன.

இப்பகிரங்க ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவு களை பணமாகவே செலு த்தப்பட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக் கொள்ள ப்படமாட்டாது. குறித்த பொரு ட்களை ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையு டன் சமுகமளிக்க வேண்டுமெ னவும் அத்துடன் ஏல விற்ப னையில் பெற்றுக் கொள்ளும் குறித்த பொருட்களை உடன டியாக அன்றைய தினமே வளா கத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் எனவும் யாழ்ப்பா ணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# நுணாவிலில் சிறுவர் பூங்கா பணிகள் ஆரம்பம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின ரால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய வித த்திலான சிறுவர் பூங்கா அமை ப்பதற்கான ஆரம்ப கட்டக் கலந் துரையாடலும் கள விஜயமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது. சாவகச் சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாத னின் தலைமையில் நகர சபை பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையா டலில்,

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், நலன் விரு ம்பிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறுவர் பூங்காவின் அமைவு தொடர்பாக பல்வேறு பட்ட தீர்மானங்களை எடுத்த னர்.

அண்மையில் நுணாவில் பகுதியில் 2 கோடியே 20 இல ட்சம் ரூபாவில் கொள்வனவு செய்யப்பட்ட 29 பரப்புக் காணி யிலேயே சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படுகிறது.

கலந்துரையாடலைத் தொட ர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்டோர் நுணாவிலில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா காணிக்கும் விஜயம் ஒன்றி னையும் மேற்கொண்டிருந்த னர். (30)



வலி. மேற்கு பிர தேச சபையின் 13 ஆம் வட்டாரத்திற் குள் உட்பட்ட அராலி மேற்கு மற் றும் அராலி மத்தி பகுதிகளில் பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வர னின் நிதிப் பங்களி ப்பில் வீதி விளக் குகள் பொருத்தப் பட்டன. (படம்-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12-15 வயது வரையான சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்க அனுமதி

**(கொழும்பு)**

**இலங்கையில் 12 முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்க தடுப்பூசி தொடர்பான ஆலோசனைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் நேற்று தெரிவித்தார்.**

இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியாக தற்போது பைசர் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் மூன்றாவது தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே 12 முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்க தடுப்பூசி தொடர்பான ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (நி)

# அடுப்பு வெடித்து உயிரிழந்த பெண் 10 கோடி ரூபாய் இழப்பீடு கோரும் கணவர்

(கண்டி)

கண்டி - குண்டசாலை பகுதியில் சமையல் எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்பு சம்ப வத்தில் எரிகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

10 கோடி ரூபாய் இழப்பீடு கோரி குறித்த வழக்கினை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# பொறுப்பற்ற ஆட்சியாளர்களால் முழுநாடும் அபாய வலயத்திற்குள்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொறுப்பற்ற ஆட்சியாளர்களினால் முழு நாடும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தற்போதைய அரசாங்கம், தமக்குச் சாதகமான தீர்மானங்களைக் கொண்டு வந்து நாட்டை மோசமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

அந்தவகையில் தற்போது இலங்கை ஏல விற்பனை பூமியாக மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்களுக்கும் நட்புறவு கொண்டாடும் கும்பலுக்கும் நாட்டின் தேசிய வளத்தை தாரைவார்த்து கொண்டிருக்கும் தறுவாயில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாக மாறியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# அதிவேக நெடுஞ்சாலைகளில் அம்புலன்ஸிற்கு கட்டணமில்லை

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)



அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் சகல அம்புலன்ஸ் வண்டிகளிடமும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கு முன்னர் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் அம்புலன்ஸ் வண்டிகளிடம் கட்டணம் அறவிடப்பட்டது.

கொவிட் தொற்று காரணமாக நாட்டு நிலைமையை கருத்திற் கொண்டு அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் சகல அம்புலன்ஸ்களிடமும் கட்டணம் அறவிடுவதை மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (நி)

# இறப்பு விகிதம் குறைவடைய தடுப்பூசியே காரணம்

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்படும் இறப்பு வீதம் குறைவதற்கு தடுப்பூசி நடவடிக்கையே காரணம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இருப்பினும், தடுப்பூசியைச் செலுத்திக்கொண்ட பின்னரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (நி)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல வீதிகளை ஊடறுத்து வெள்ளநீர் பாய்கிறது. இதனால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதுடன், அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும், பயணம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.


## மாடிவீடு வாடகைக்கு

கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலைக்கு அருகாமையில் (அறிவியல் நகர் பிரதேசத்திற்கு அண்மையாக) புதிதாக கட்டப்பட்ட மாடிவீடு ஒன்று வாடகைக்கு உள்ளது.
அரச, அரசசார்பற்ற நிறுவனாங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கு பொருத்தமானது.
தேவையானவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-3233) **077 065 0875**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம் நுண் நிதியியல் டிப்ளோமா கற்கை நெறி-2021/2022 (அணி-V)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- **கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- **கற்பிக்கப்படும் மொழி** - தமிழ்
- **விண்ணப்பிப்பதற்கான தகுதி** - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- **கற்கைநெறிக்கான கட்டணம்** - ரூபா. 33,250/-

**கட்டண விபரம் :**

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | - | 2,500.00 |
| கல்விக் கட்டணம் | - | 25,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - | 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - | 750.00 |
| மொத்தம் | - | 33,250.00 |

- **விண்ணப்ப முடிவுத் திகதி** - 31.12.2021
- **விண்ணப்பப் படிவத்தினை பெறும் முறை:**

விண்ணப்பப் படிவத்தினை http://www.maco.jfn.ac.lk/ என்ற இணையத்தள முகவரியூடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- **விண்ணப்பிக்கும் முறை :**

எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் (கணக்கிலக்கம் - 050052020001509 ) விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300 ஐ செலுத்தி, தரவிறக்கம்செய்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பற்றுச்சீட்டினை இணைத்து உதவிப்பதிவாளர், முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 10ம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும். (மாதிரி வைப்புச்சீட்டினை http://www.maco.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்). கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "**நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் - 2021/2022** (அணி - V)" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3610 http://www.maco.jfn.ac.lk

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (C-3298)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம் / வெளிநாடு

# அபுதாபியில் இடம்பெற்ற வரலாற்று சந்திப்பு

(அபுதாபி)

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த முதல் இஸ்ரேல் பிரதமர் என்ற பெருமையை நஃப்தலி பென்னட் பெற்றுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் நஃப்தலி பென்னட், அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் மொஹம் பின் சயீத்தை அபுதாபியில் உள்ள அவரது தனிப்பட்ட அரண்மனையில் நேற்று சந்தித்ததாக பென்னட்டின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலக வல்லரசுக்கும் ஈரானுக்கும் இடையிலான அணுசக்திப் பேச்சுவார்த்தைகளின் போராட்டத்தின் பின்னணியில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (நி)

# விண்வெளிக்கு சுற்றுலா சென்ற 74 வயது மூதாட்டி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரான ஆலன் ஷெப்பர்ட்டின் மகளான 74 வயதான லாரா ஷெப்பர்ட் உள்ளிட்ட 6 பேரை கொண்ட குழு புளூ ஆரிஜின் நிறுவனத்தின் மூலம் விண்வெளிக்கு சுற்றுலா சென்று விட்டு திரும்பியது.





உலகின் முன்னணி ஒன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெப் பெசோஸ், புளூ ஆரிஜின் என்ற பெயரில் விண்வெளி நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். மனிதர்களை விண்வெளிக்கு அழைத்து செல்வதை நோக்கமாக கொண்டு இந்த நிறுவனம் இயங்கி வருகிறது.


அந்த வகையில் கடந்த ஜூலை மாதம் தனது நிறுவனத்தின் தயாரிப்பான நியூ ஷெப்பர்ட் விண்கலத்தின் மூலம் ஜெப் பெசோஸ் விண்வெளிக்கு சென்று வந்தார். இது மிகப்பெரும் மைல்கல் சாதனையாக பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரான ஆலன் ஷெப்பர்ட்டின் மகளான 74 வயதான லாரா ஷெப்பர்ட் உள்ளிட்ட 6 பேரை கொண்ட குழு புளூ ஆரிஜின் நிறுவனத்தின் மூலம் விண்வெளிக்கு சுற்றுலா சென்று விட்டு திரும்பியது.

லாரா ஷெப்பர்ட்டின் தந்தையான ஆலன் ஷெப்பர்ட் கடந்த 1961 ஆம் ஆண்டு மே 5ஆம் திகதி புளோரிடா மாகாணத்தில் இருந்து மெர்குரி விண்கலத்தில் விண்வெளிக்கு பயணித்து, அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரர் என்கிற பெருமையை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## 20 வருடங்களின் பின்

# 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டத்தை வென்றார் ஹர்னாஸ்



(டில்லி)

2021 ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை பஞ்சாப்பை சேர்ந்த ஹர்னாஸ் சாந்து பெற்றுள்ளார்.

இந்த ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் போட்டி இஸ்ரேலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட 21 வயதான ஹர்னாஸ் சாந்து குறித்த பட்டத்தை 20 வருடங்களுக்குப்பின் வென்று சாதனை படைத்துள்ளார். பொது நிர்வாகத்தில் எம்.ஏ பட்டம் பெற்ற இவர் பஞ்சாப்பில் ஒருசில திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

அதேநேரம் இதற்கு முன் கடந்த 2000 ஆம் ஆண்டளவில் இந்தியாவின் லாரா தத்தா மிஸ் யுனிவர்ஸ் ஆக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சுவீடன் கடற்பரப்பில்

# சரக்குக் கப்பல்கள் மோதி விபத்து மீட்புப் பணிகள் தீவிரம்



(சுவீடன்)

சுவீடனின் கரையோர பால்டிக் கடலில் இரண்டு சரக்குக் கப்பல்கள் மோதி விபத்துக்குள்ளாகி ஒரு கப்பல் கவிழ்ந்ததை அடுத்து, அப்பகுதியில் மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து குறைந்தது இரண்டு பேர் கப்பலில் இருந்ததாக நம்பப்படுகிறது என்று சுவீடிஷ் கடல்சார் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (நி)

# அவுஸ்திரேலியா- தென் கொரியா இடையே 717 மில்லியன் டொலர் பாதுகாப்பு ஒப்பந்தம்

(கன்பெரா)

அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசன் மற்றும் தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் ஆகியோர் 717 மில்லியன் அமெரிக்க டொலர் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.



சுமார் 1 பில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் பெறுமதியான இந்த ஒப்பந்தம் திங்களன்று கன்பெராவிற்கான நான்கு நாட்கள் பயணத்தின் போது கைச்சாத்திடப்பட்டது.

கொவிட் தொற்றுநோய் தொடங்கிய பின்னர் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் முதல் வெளிநாட்டுத் தலைவர் தென் கொரிய ஜனாதிபதி ஆவார்.

புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் தென் கொரிய பாதுகாப்பு நிறுவனமான 'Hanwha' அவுஸ்திரேலியா இராணுவத்திற்கு பீரங்கி ஆயுதங்கள், விநியோக வாகனங்கள் மற்றும் ரேடார்களை வழங்கும்.

இது அவுஸ்திரேலியாவுக்கும் ஆசிய நாட்டிற்கும் இடையே செய்யப்பட்ட மிகப் பெரிய பாதுகாப்பு ஒப்பந்தமாகும்.

மேலும் இது அவுஸ்திரேலியாவிற்கும் சீனாவிற்கும் இடையே பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகிலேயே முதல் காகிதமற்ற அரசாக மாறியது டுபாய்

(டுபாய்)

உலகிலேயே 100 சதவீதம் காகிதம் இல்லாத அரசாங்கமாக டுபாய் மாறியுள்ளதாக எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் அறிவித்துள்ளார்.

டுபாயில் கடந்த 2018ம் ஆண்டு முதல் காகிதமில்லா டிஜிற்றல் நகரமாக மாற்றும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை ஐந்து கட்டங்களாக பிரித்து பட்டியலிடப்பட்டன.

இதன் ஐந்தாவது கட்டத்தின் முடிவில், டுபாயில் 45 அரசு துறைகளும் காகிதமற்றவையாக மாற்றப்பட்டன. இதன்மூலம், உலகின் முதல் காகிதமில்லா அரசு என்ற பெருமையை டுபாய் பெற்றுள்ளது.

இந்த துறைகள் 1,800க்கும் மேற்பட்ட டிஜிற்றல் சேவைகள் மற்றும் 10,500க்கும் மேற்பட்ட முக்கிய பரிவர்த்தனைகளை வழங்குகின்றன. இதுகுறித்து, எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இந்த சாதனை புதுமை, படைப்பாற்றல் மற்றும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் பயணம். இது டுபாயின் உலக முன்னணி டிஜிற்றல் மூலதனம் மற்றும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்தும்.

அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவைகளை வடிவமைப்பதில் இது ஒரு முன்மாதிரியாக அதன் நிலையை வலுப்படுத்துகிறது.

இத்திட்டத்தின் மூலம், டுபாய் அரசாங்கத்திற்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் சேமிக்கப்படுவதுடன், 14 மில்லியனுக்கும் அதிகமான மனித வேலை நேரமும் மிச்சமாகிறது" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயற்பாடுகளை சமூகத்தின் ஒத்துழைப்பின்றி கட்டுப்படுத்த முடியாது

## மதுவரித் திணைக்கள அத்தியட்சகர்

(கண்டாவளை)

**சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகளை சட்டத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலமே முற்றுமுழுதாக கட்டுப்படுத்த முடியும் என கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் கிருபாகரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனை என்பன அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக பெண்களும் இவ்வாறான தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறான சட்டவிரோத மதுபான விற்பனை உற்பத்திகள் தொடர்பில் பெண்கள் உட்பட பலருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் கூட முக்கொம்பன் பிரதேசத்தில் இவ்வாறான சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்டங்களை மட்டும் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது. சமூகத்தில் இருந்து வருகின்ற ஒத்துழைப்புக்கள் மற்றும் விழிப்புணர்வுகள் மூலமே இந்தச் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த முடியும்.

குறிப்பாக ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கின்ற கிராம மட்ட அமைப்புகள், மதப் பெரியார்கள்,சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்புக்கள் அவசியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-6-315)

# ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சிக்கு விஜயம்

(முறிகண்டி)

காணாமல் போனோர் தொடர்பான முன்னைய ஆணைக் குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டது.

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த குறித்த ஆணைக்குழு காணாமல் போனோரின் குடும்பங்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டது. குறித்த குழுவின் தலைவர் நீதியரசர் ஏ.எச். எம். டி. நவாஸ் தலைமையில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்ரா பெர்னாண்டோ, முன்னாள் அரச அதிபர் நிமல் அபேசிங்க, லோகேஸ்வரி பத்மராஜா ஆகியோரை உள்ளடக்கிய ஆணைக்குழு உறுப்பினர்கள் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து காணாமல் போனவர்களின் உறவுகள் குறித்த ஆணைக்குழுவினரை சந்தித்து காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்தனர். (5-6-100-281)




முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் தேசிய உற்பத் தித்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (படம்: யது பாஸ்கரன்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பகுதியில் (காவலரண் இருந்த பகுதியில்) அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. முல்லைத்தீவு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி W.P.M.A.அமரசிங்க தலைமையில் நடைபெற்ற பொலிஸ் நிலைய திறப்பு நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கார சிறப்பு விருந்தினராக வருகை தந்து பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார். (படம்: தவசீலன்)

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடமாகாண தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள **NEC** கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து ஆவணங்களுடன் தொண்டராசிரியர்களின் சேவையை உறுதிப்படுத்திக் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (5)

# பரந்தனில் வெடிகுண்டுகள் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் குஞ்சுப் பரந்தன் பகுதியில் உள்ள காட்டுப்பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் இரண்டு வெடி குண்டுகள் இருப்பதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு கடந்த சனிக்கிழமை தகவல் கிடைத்தது.

அதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் வெடிபொருட்களை அகற்றுவதற்கு நீதிமன்ற அனுமதியுடன் வெடிகுண்டை செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (5-6-316)

# கண்டாவளைப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பூங்காவனம் சந்திப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று முன்தினம் குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6-315)




# குழு மோதல் ஒருவர் காயம்

(தருமபுரம்)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்று மோதலாக மாறியது.

இதில் படுகாயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6-316)




முல்லைத்தீவு மாவட்டத்தின் விஸ்வமடு ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி கண்ணிநகர் பிள்ளையார் கோவில் வளாகம் பிரதேச வைத்தியசாலை போன்ற இடங்களில் இராணுவத்தினரால் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.(படம்: யதுபாஸ்கரன்)



வவுனியா ஓமந்தை பொற்கோவிலுக்கு செல்லும் பிரதான வீதியை சீரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் வாகனங்களை வழி மறித்து போராட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்தனர். (படம்: சதீஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பூஸ்டர்' பெற்ற பின் ஏற்படும் அறிகுறிகளால் பயப்பட வேண்டாம்

## சிறப்பு மருத்துவர் மல்காந்தி தெரிவிப்பு

(கொழும்பு)

கொவிட் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மூன்றாவது டோஸ் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்ற பிறகு ஏற்படும் சிறிய நோய் அறி குறிகளைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று சிறப்பு மருத்துவர் மல்காந்தி கல்ஹேனா தெரிவித்தார்.

தடுப்பூசி உடலில் செயற்படுத்தப்படுவதால் அந்த சிறிய அறிகுறிகள் ஏற்படுகின்றன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

"பைசர் மூன்றாவது டோஸை செலுத்தும் போது, சிறிய அறிகுறிகள் மூன்று நாட்கள் வரை தோன்றும்.

உடல்வலி, தலைவலி, குமட்டல் அல்லது வாந்தி போன்றவை இதன் அறிகுறிகளாகும்.

ஆனால் பயப்பட வேண்டாம். தடுப்பூசியால் ஏற்படக் கூடிய சில அறிகுறிகள் இவை" என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## கல்வி, ஞானம் தரும் வைகாசி விசாகம்



### வழிபடும் முறை

விசாகம் ஞானத்திற்குரிய நட்சத்திரம். வைகாசி விசாகத்தன்று விரதம் இருந்து பால் குடம், பால் காவடி எடுத்து முருகனை வணங்கினால் ஞானமும், கல்வியும் பெருகும். துர்தேவதைகளின் கொடுமைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லாமல் இருப்பவர்கள் வைகாசி விசாகம் அன்று விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபட்டால் குழந்தை பாக்கியம் உடனே கிடைக்கும். இந்த விரதத்தை மேற்கொள்ளும் பெண்கள் மோர், பானகம், தயிர் சாதம் ஆகியவற்றை ஏழைகளுக்கு தானமாக கொடுக்கலாம்.

வைகாசி விசாகம் தான் எமதர்மன் அவதரித்த நாளாகும். இந்நாளில் எமனுக்கு தனிபூஜை செய்வது உண்டு. எம பூஜை செய் வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளைஅவர் வழங்குவதாகஐதீகம்.

வைகாசி விசாகத்தன்று விரதம் இருந்து முருகனை தொழுது வணங்கினால் பகை விலகும். துன்பம் நீங்கும். இந்நாளில் குடை, செருப்பு, மோர், பானகம், தயிர் சாதம் முதலியவற்றை ஏழைகளுக்கு தானம் செய்தால்திருமண பேறு கிட்டும் குழந்தைப் பேறு உண்டாகும். குலம் தழைத்து ஓங்கும். ஆபத்துக்கள் அகலும்.

வைகாசி விரதம் இருப்பவர்கள் அதிகாலை 4.30 மணியளவில் இருந்து 6 மணிக்குள் எழுந்து குளிக்க வேண்டும். நாள் முழுவதும் விரதம் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க முடியாதவர்கள்ஒருவேளை உணவு உட்கொள்ளலாம். மற்றவர்கள் பால், பழம் சாப்பிட்டு விரதம் இருக்கலாம். முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரங்களான 'ஓம் சரவணபவ', 'நம ஓம் முருகா' என்பவற்றில்ஏதாவது ஒன்றை சொல்லலாம். திருப்புகழ், கந்த சஷ்டி கவசம் படிக்கலாம்.

முருகன் கோவிலுக்கு சென்று விளக்கேற்றி வழிபடுவது நல்லது. முருகன்கோவில் அமைந்துள்ள மலையை சுற்றி கிரிவலம் வந்தால் விசேஷம். இந்த விரதம் இருப்பவர்களுக்கு அனைத்து செல்வங்களும் கிடைக்கப்பெறும்.

### புத்த பூர்ணிமா


'காலங்களில் நான் வசந்தம்' என்று கண்ணன் பகவத் கீதையில் கூறி உள்ளார். வசந்த காலம் என்பது இளவேனிற் காலம். சித்திரை, வைகாசி மாதங்களே இக்காலம். பூக்கள் அதிகம் பூத்துக் குலுங்கும் காற்று அதிகம் உண்டு. மலர்களும் அதிகம் மலர்ந்து மணம் பரப்பும் வைகாசி மாதத்தில் தான் கோவில்கள் அனைத்தும் வசந்த உற்சவம் நடைபெறும். புத்தர் அவதரித்தது வைகாசி விசாகத்தில் தான்.

சித்தார்த்தர் என்ற பெயரில் இளவரசராக இருந்த அவர் புத்தராக மாறியதும், பௌத்த மதத்தை தோற்றுவித்ததும் இதே விசாக பௌர்ணமி அன்று தான். இதைத்தான் 'புத்த பூர்ணிமா' என்று அழைக்கிறோம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## சிசுவுக்கு எமனான வாழைப்பழம்



(கொழும்பு)

வாழைப்பழத்துண்டு தொண்டையில் சிக்கி 11 மாத சிசு நேற்ற முன்தினம் மாலை உயிரிழந்துள்ளது. அஹங்கம-எத்துன்கெலே தோட்டத்தைச் சேர்ந்த ஆண் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது. (நி)

## பாதீட்டிற்கு ஆதரவு; பதவியில் இருந்து இடைநிறுத்தம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

கட்சியின் தீர்மானத்தை மீறி 2022 பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்த தன் காரணமாக, உடன் அமுலாகும் வகையில் தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (நி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 700 |
| தக்காளி | 550 | 480 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 370 | 340 | 400 | 450 |
| கரட் | 450 | 450 | 480 | 600 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 300 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 800 | 600 | 800 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 220 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 600 | 600 | 480 | 400 |
| லீக்ஸ் | 320 | 350 | 400 | 500 |
| பீற்றூட் | 160 | 180 | -- | 300 |
| கறிமிளகாய் | 600 | 900 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 550 | 800 | -- | 800 |
| போஞ்சி | 300 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 130 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-90 |
| இராசவள்ளி | -- | 240 | 200 | 240 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 140 | 150 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 70 | 60 |
| வல்லாரை | 30 | 40 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கினால் பாதிக்கப்படும் சிறுவர்கள்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் டெங்கு நோயினால் அதிகளவான சிறுவர்கள் பாதிக்கப்படலாம் என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.**

நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் சுமார் 30 சதவீதம் பேர் 5 முதல் 19 வயதுக்குட்பட்டவர்கள் என்பதனால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் டெங்கு நோய் அதிக ஆபத்துள்ள 59 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாத நிலவரப்படி, 25,910 டெங்கு நோயாளிகள் மற்றும் 19 மரணங்கள் பதிவாகியுள்ளன. (நி)



30 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்தவர்களுக்கான 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று ஆரம்பமாகி நடைபெற்றது.

(படம்:ஜோசப்நயன்)

# எரிவாயு மட்டுமல்ல; மக்கள் இதயங்களும் வெடிக்கும்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள இதே நிலைமை தொடர்ந்து சென்றால் சமையல் எரிவாயு கொள்கலன்கள் மாத்திரமல்ல, மக்களின் இருதயமும் வெடித்து சிதறும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கை மக்கள் பசிக்காக குப்பைக்கூடையைக் கிளறி உணவைத் தேடும் நிலைமைக்கு சென்று கொண்டிருப்பதாக வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னரும் இலங்கை இப்படியான அனர்த்தத்தை எதிர்நோக்கியது. மீண்டும் அதே யுகத்தை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# உரக் கலன்கள் வெடிப்பை பெரிதுபடுத்துவதில் நியாயமில்லை

## என்கிறார் விவசாயத்துறை அமைச்சர்

(கொழும்பு)

800,000 விவசாயிகளுக்கு தரமான உரம் வழங்கப்பட்ட நிலையில் நான்கைந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக்கலன்கள் வெடித்துச் சிதறியதாக மாத்திரம் பேசுவதில் நியாயமில்லை என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கலன்கள் வெடித்துச் சிதறிய சம்பவங்கள் பல இடங்களில் பதிவாகியிருந்தன.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கலன்கள் சில அதிக நைதரசன் செயற்பாடு காரணமாக வெடித்துச் சிதறியுள்ளன என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (நி)

# எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் லாஃப்எரிவாயுமற்றும்லிட்டோ நிறுவனங்களுக்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சட்டப் பிரிவு, வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் இது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான வெடிப்புச் சம்பவங்களின் போது எரிவாயு சிலிண்டருடன் தொடர்புடைய கருவிகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் எரிவாயு நிறுவனங்களுக்கு தொடர்பு உண்டா என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிவாயு கொள்கலன்களுடன் தொடர்புடைய கருவிகள் மற்றும் அவற்றை பராமரித்தல் குறித்து இரண்டு எரிவாயு நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழக நிபுணர்களின் ஆய்வு அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## எப்போதும் இன்பமாக வாழ என்ன வழி?

நம் அறிவு பரந்து விரிந்து பண்பட்டு இருந்தால் எத்தகைய துன்பம் தரும் செயல்களும் நமக்குக் கவலையைத் தரமாட்டா. ஒளி என்னும் இன்பம் இருக்குமானால் நிழல் என்னும் துன்பம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

உலகில் தொன்று தொட்டு நிலவி வந்து நம்மைப் பின் தொடர்ந்து வரும் துன்பங்களை நாம் தத்துவார்த்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு எண்ணி ஏற்றுக் கொள்ள மறுத்தால் இன்பம் என்பது இம்மியளவும் இல்லாமல் போகும்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் நம் புத்தி வேலை செய்யும் விதத்தைப் பொறுத்தே நமக்கு எந்த விடயங்களும் இன்பங்களாகவோ துன்பங்களாகவோ தெரிகின்றன.

நம் சிறு சிந்தனை ஓராயிரம் பிரச்சினைகளையும் விரட்டி அடிக்கவல்ல. வலிமையைத் தர வல்லது ஆகும்.

பாறையில் துளிர்விட ஆரம்பித்து அந்தப் பாறையையே நொறுக்கி பொடித்து மண்ணாக்கி அந்த மண்ணிலேயே வேரை செலுத்தி ஊன்றி செழித்து வளரும் தாவர இனங்கள் இவ்வுலகில் உண்டு.

இது இயற்கை மனிதனுக்கு காட்டும் உதாரணம். தன் நெஞ்சின் மீது வேல் தைத்திருக்க பகைவர் படையின் யானையை தாக்க வேல் காணாத வெற்றி மறவன் தன் நெஞ்சு வேலை பிடுங்கி அதன் மீது எறிந்தது பற்றி நாம் அறிந்திருக்கிறோம். இது இலக்கியம் காட்டும் உதாரணம்.

இவ்விரண்டும் படித்து ரசிக்கவோ, வியந்து போற்றவோ மட்டுமல்ல, நம் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு கூட. துன்பங்கள் துன்புறுவதற்காகவே அல்ல. இதனால் உடலும் உள்ளமும் தான் கெடும். மேலும் துன்பம் வெறுப்பாகும், வெறுப்பு விரக்தியாகும். விரக்தியோ எங்கோ கொண்டுபோய் விட்டு விடும். துன்பங்கள் நம் முன்னேற்றப் பாதையின் படிக்கற்கள் என்று எண்ணும் மனப்பக்குவம் வரவேண்டும்.

எத்தகைய முடிவுகளையும் விளைவுகளையும் இயற்கையாக வரும் இன்னல்களையும் ஏற்றுக் கொள்ள தயாராகி விட வேண்டும். அவற்றைப் பூதக் கண்ணாடி கொண்டு நோக்கும் தவறான மனப்பான்மையை கைவிட வேண்டும். ஒருவருக்கு தைபோய்ட்டு காய்ச்சல் வந்தது.

அது வந்து போன பிறகு நல்ல பல மாற்றங்களும் ஏற்பட்டன. உடல் செழித்து முகம் களை கட்டியது. அவரைப் பொறுத்தளவில் தைபோய்ட்டு என்னும் துன்பம் நன்மை செய்யவே வந்திருக்கிறது என எண்ண இடமுண்டு.

எல்லாம் நன்மைக்கே என எண்ணும் மனப்பக்குவத்தையும் நாம் கைக்கொள்ள வேண்டும். நம் மனம் பண்படைய வேண்டும், உறுதி பெறவேண்டும், அமைதி பெற வேண்டும். இதற்கு கல்வி அறிவும் இறைபக்தியும் பல்வேறு புத்தகங்களை படிப்பதனால் பெறக்கூடிய சுய சிந்தனையும் சிந்தனைத் தெளிவும் மிக உதவும்.

இவற்றை நாம் பெற்று விட்டால் துன்பம் வந்தால் தலை தொங்காது. நெருக்கடி நம்மை நிலைகுலைய வைக்காது. சிக்கல் சீரழிய வைக்காது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தாகம்



அந்த அடர்ந்த காட்டில் தாகத்தினால் வாடிய நரி ஒன்று அங்குமிங்கும் நீர் தேடி அலைந்தது. ஓரிடத்தில் நீர்நிலை ஒன்று காணப்பட்டது. அதைக் கண்ட நரி பெரிதும் மகிழ்ச்சி அடைந்தது. அதில், இறங்கித் தண்ணீரைக் குடித்து விட வேண்டும் என்று தீர்மானித்தது.

இயல்பிலேயே எச்சரிக்கை மிக்க நரி, "ஒரு வேளை இந்த நீர் நிலையில் முதலை போன்ற கொடிய நீர்வாழ் உயிரினங்கள் இருந்தால் நம்மைக்கொன்று தின்று விடுமோ!" என்று ஒரு கணம் எண்ணியது.

இதைச் சோதித்துப் பார்த்து விடுவது என்ற எண்ணத்துடன் நீர் நிலையை உற்று நோக்கியது.

நீர்நிலை எந்தச் சலனமும் இல்லாமல் பேரமைதியாக இருந்தது. ஆள் அரவமற்ற இடத்தில் நீர் நிலை ஒன்றில் நீர் ஆடாமல், அசையாமல் இருந்தால் அதில், முதலை உள்ளது என்று நரியின் முன்னோர்கள் எப்போதோ நரியிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

எனவே, அது அந்த நீர் நிலையில் முதலை நிச்சயம் இருக்கும் என்ற எண்ணத்துடன், அதைச் சோதிக்க ஒரு சின்னக் கல்லை நீர் நிலையில் உருண்டு விழும்படி உருட்டியது.

கல் விழுந்தவுடன், நீருக்குள்ளிருந்து சிலிர்த்துச் சீறி வந்தது முதலை ஒன்று. அது கரையில் நின்ற நரியைப் பார்த்தவுடன் அதன் மேல் பாய்ந்தது. நரி சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டது.

"நன்றி முதலையாரே... நல்ல வேளை உன்னிடமிருந்து இறைவன் என்னைக் காப்பாற்றி விட்டார்!" என்று கூறியது நரி.

முதலைக்கு இரை கிடைக்காத எரிச்சல் இருந்த போதிலும் இச்சகமாகப் பேசியது. "நீ சொல்வது உண்மை தான் நண்பா. நீ தரையில் இருந்து உணவைத் தேடி, வேட்டையாடிப் பெறுகிறாய். நான் என் இருப்பிடம் வரும் இரையை வேட்டையாடுகிறேன்.

இதில் யாரையும் தப்புச் சொல்ல இடமில்லை என்றாலும் உன் சாமர்த்தியத்தை நான் பாராட்டத்தான் வேண்டும்", என்று கூறியது

"நீ எனக்கு இரை யாகவில்லை என்ற வருத்தம் எனக்கு இருந்தது உண்மைதான். ஆனால், உன் சாமர்த்தியம், அறிவை நேரில் பார்த்த பிறகுதான் நீ உண்மையில் அறிவாளி என்று ஏற்றுக் கொள்கிறேன். உன் நட்பு வேண்டும். என்னை நண்பனாக ஏற்றுக் கொள்!" என்று கூறியது. (தொடரும்)

# மகாபாரதம்




ஜமதக்கினியும் தந்தை பரசுராமரும்

அவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அடைகிறான். எவன் ஒருவன் ஐம் பொறிகளையும் அடக்குகிறானோ அவன் இன்பம் அடைகிறான்.

இந்த உடல் ஒரு தேர். ஐம்பொறிகளும் அதில் பூட்டப்பட்ட குதிரைகள். உயிரே அவற்றை இயக்கும் சாரதி.

இந்த ஐந்து குதிரைகளையும் அடக்கி ஆள்பவன் நல்ல நிலையை அடைவான்" எனத் தரும வியாதர் உரைத்தார்.

"உம்மால் பலவற்றை நான் அறிந்து கொண்டேன். இவற்றால் நான் பெரிதும் பயன் அடைந்தேன். விடை பெறுகிறேன்" என்றான் கௌசிகன்.

அது கேட்ட வியாதர் "நீர் எம் வீட்டிற்கு வர வேண்டும். வந்தால், புண்ணியப் பலனைக் கண்கூடாக பார்த்து அறிந்து கொள்வீர்" என்றார்.

சம்மதித்த கௌசிகரை அழைத்துக் கொண்டு இல்லத்திற்கு விரைந்தார் தரும வியாதர். வீட்டில் அவரது முதிய தாய் -தந்தையருக்குச் செய்யும் பணிவிடைகளை அவன் வியக்குமாறு எடுத்துரைத்தார். இதுவே நான் செய்யும் புண்ணிய காரியம் என்றார்.

வீட்டின் உள்ளே நான்கு அறைகள் இருந்தன. வீடு ஒரு கோயில் போல விளங்கியது. கோயிலில் உள்ள தெய்வம் போல இருந்தனர் தரும வியாதரின் பெற்றோர். தெய்வத்தை வழிபடுவது போல பெற்றோரை வணங்கி வழிபட்டார் தரும வியாதர்.

"மகனே நீ நீடூழி வாழ்க. நீ நல்ல ஞானத்தை அடைந்திருக்கிறாய். நாங்கள் உன்னால் உபசரிக்கப்பட்டு தேவ சுகத்தை இங்கேயே அடைந்துள்ளோம்.

எங்களைத் தவிர உனக்கு வேறு தெய்வம் இல்லை எனபதை நாங்கள் அறிகிறோம். உன் நல் ஒழுக்கத்தைக் கண்டு பாட்டனாரும் முப்பாட்டனாரும் மிக வும் மகிழ்ந்துள்ளனர்.

நீ மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஒரே தன்மையுடையவனாய் இருக்கிறாய். ஜமதக்கினி தன் தந்தை பரசுராமரை எப்படி அக்கறையோடு கவனித்துக் கொண்டாரோ அப்படி நீ எங்களைக் கவனித்துக் கொள்கிறாய்" என தரும வியாதரின் பெற்றோர் அவரை மிகவும் பாராட்டினர்.

பின், தரும வியாதர் தன் பெற்றோரை கௌசிகனுக்கு அறிமுகம் செய்தார். பின் தரும வியாதர் கௌசிகனிடம் "தாய் தந்தையர் தான் நான் வணங்கும் தெய்வங்கள்.

தேவர்கள் தேவேந்திரனை எப்படி வழிபடுகிறார்களோ அப்படி இவர்களை நான் வழிபடுகிறேன். உயர்ந்த பொருட்களைக் கொண்டு இவர்களை ஆராதிக்கிறேன். எனக்கு நான்கு வேதங்களும் இவர்களே.

என் மனைவியோடும், மகனோடும் இவர்களுக்கு நானே பணிவிடை செய்கிறேன். இவர்களுக்கு பிரியமில்லாத எதையும் நான்செய்வதில்லை. உலகில் மேன்மை அடைய வேண்டுமாயின் தாய் தந்தையரை போற்ற வேண்டும்" என்றார் தரும வியாதர்.

அவர் மேலும், "நீர் மிதிலை சென்று தரும வியாதரைக் காண்பீராயின் அவர் உமக்குத் தருமங்களைக் கூறுவார்" என அக்கற்புக்கரசி சொன்னாள். இதை என் ஞானத்தால் நான் அறிந்தேன்" என்றார்.

கௌசிகன் தரும வியாதரிடம் "தூய விரதம் உடையவரே! பத்தினியின் சொற்களை அப்படியே உரைத்த உம்மை நான் சிறந்த தவசியாகக் கருதுகிறேன்" எனப் பாராட்டினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் தருபவரைவிட அதனைப் பெறுபவரின் இயல்பைப் பொறுத்தே தானத்தின் தகைமை உயர்கிறது. - வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடைமுறைக்குச் சாத்தியமான தீர்மானங்களை எடுங்கள்

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் நேற்று முன்தினம் (12) கொழும்பில் ஒன்றுகூடி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஆராய்ந்துள்ளன.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்த வலியுறுத்துகின்ற அதேநேரம், சமஷ்டி தீர்வை நோக்கிப் பயணித்தல் என்றும் முடிவு செய்துள்ளன.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துமாறு கோரிக்கை விடும்போது, அதனை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொண்டதாக ஆகிவிடாதா? என்ற கேள்வி எழவே செய்யும்.

இங்குதான் 13ஆவது திருத்த சட்டமூலத்தை அமுல்படுத்துவதென்பது, ஒரு தற்காலிக ஏற்பாடு என்றும் அவ்வாறானதொரு தற்காலிக ஏற்பாட்டைச் செய்வது இலக்கை அடைவதற்கு அவசியமாகிறது என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

தவிர, எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் தமிழ் – முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி, இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுகின்ற வழிப்பாதையை திட்டமிடுவதென்றும் இதில் 13ஆவது திருத்த சட்டமூலத்தை அப்படியே அமுல்படுத்துவது, சமஷ்டித் தீர்வை எட்டுவது எனக் கூட்டுத் தீர்மானத்தை தயாரித்து அதில் கூட்டாகக் கையொப்பம் இடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்போந்த தீர்மானங்கள் தொடர்பில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் எழவே செய்யும்.

அவ்வாறான வேறுபட்ட அபிப்பிராயங்களை கூட்டுக்குள் அகப்படாத தமிழ்த் தரப்புகள் முன்னெடுக்கலாம்.

13ஆவது திருத்த சட்டமூலத்தை தீர்வாகப் பெறுவதற்காகவா இத்துணைப்பாடுகள் என்றும் அவர்கள் கேட்கலாம்.

எனினும் இங்கு குறித்த கேள்விகளை உதாசீனப்படுத்தாமல், அதற்குரிய விளக்கத்தைக் கொடுப்பது கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ் – முஸ்லிம் கட்சிகளின் பொறுப்பாகும்.

இதற்கு மேலாக, கூட்டுச் சேர்ந்த தமிழ் – முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டின் அவசியத்தை – ஒற்றுமையின் வலிமையை உணர்ந்து கொண்டு செயலாற்றுவது மிக மிக அவசியமானதாகும்.

அதேநேரம் கூட்டுச்சேர்ந்த அரசியல் கட்சிகள் தாம் எடுக்கின்ற தீர்மானம் தொடர்பில் போதிய விளக்கத்தை தமது கட்சிப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து, ஒரு கட்சியின் தலைவர் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட, அதே கட்சி சார்ந்த இன்னொருவர் கூட்டு உடன்படிக்கைக்கு எதிராகக் கருத்துரைக்கும் நிலைமை ஏற்படும்.

இவ்வாறான நிலைமை ஏற்படுமாயின் அஃது கூட்டின் மீது அவநம்பிக்கையை உருவாக் கும்.

எனவே தமிழ் பேசும் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் கூட்டும் காலத்தின் தேவை என்பதுடன் யதார்த்தத்திற்கும் நடைமுறைக்கும் பொருந்தக்கூடிய தீர்மானங்களை எடுக்கும்போதே இலக்கை அடைய முடி யும் என்பதையும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பது நம் தாழ்மையான கருத்து.

# கொரோனாவின் 3 ஆவது அலையால் 60 கர்ப்பவதிகள் 89 சிறுவர்கள் பலி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட கோவிட் நோயின் 3 ஆவது அலையில் 60 கர்ப்பவதித் தாய்மார்களும் 18 வயதுக்குட்பட்ட 89 சிறுவர்களும் கோவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சின் தாய் மற்றும் சிறுவர் சுகாதார பணிப்பாளர், மருத்துவர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேலும் கர்ப்பவதித் தாய்மார்களும் பூஸ்டர் டோஸ் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாக்க அனைவரும் சுகாதார நடைமுறையை பின்பற்றுமாறும் கேட்டுக் கொண்டார். (ம)

# லிட்ரோ புதிய எரிவாயுவும் உரிய தரத்தில் இல்லை

## நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த

(கொழும்பு)

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் சமையல் எரிவாயு உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லையென தெரியவந்துள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

லிட்ரோ நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் ஒரு கப்பலில் சமையல் எரிவாயு கொண்டுவரப்பட்டது.

அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தியதில், வாசனையை அறிந்துகொள்ளும் பதார்த்தமான, எத்தில் மேகெப்டனின் (Ethyl Mercaptan) அளவு, 15 க்கும் 17க்கும் இடையில் இருக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கும் குறைந்த மட்டத்திலேயே அது இருப்பதாக தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, ப்ரொப்பேன் மற்றும் பியூட்டேன் விகிதங்கள் 29க்கு 69 என்ற அடிப்படையில் இருப்பதாக நம்பகத்தன்மையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன நிறுவனத்தின் பரிசீலனையின்படி, இந்த எரிவாயுவில் ப்ரொப்பேன் 33 சதவீதமாக இருப்பதென அறியக் கிடைக்கிறது.

இதேவேளை, உரிய தரமற்ற எரிவாயுவை தரையிறக்க அனுமதிக்கப் போவதில்லையென நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். (ம)

# நாட்டில் நேற்று மேலும் 747 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 747 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 573,649 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** வைரவப் புளியங்குளம், ஆதி விநாயகர் கோவிலடி, குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்-மணியர்குளம், முகத்தாங்குளம் முதலாவது பண்ணை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்

# ஹெரோயின் போதையுடன் கல்லுண்டாயில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்லுண்டாய் வெளியூடாக ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்படுவதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது. இதனையடுத்து அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நவாலி பகுதியைச் சேர்ந்த 36 வயது நபர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் 18.670 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (ம-60)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## தவறுகளைத் திருத்திக்கொள்

❖ ஒழுக்கத்தை அதிகம் வலியுறுத்தியதோடு, அதை கடைபிடித்தவர்களில் புத்தருக்கு இணையான ஒருவரை உலகம் இதுவரை காணமுடியவில்லை.

❖ ஆயிரம் முறை இடறி விழுவதன் மூலம் நல்ல ஒழுக்கத்தை உறுதியாகப் பின்பற்றி நடக்க முடியும்.

❖ ஆன்மிகம் என்பது அனுபவித்து அறியும் விஷயமே தவிர, வெறும் பேச்சன்று.

❖ இரும்பைப் போன்ற மன உறுதியும், மலைகளைத் துளைத்துச் செல்லும் வலிமையும் வந்து விட்டால் கடலையும் கடக்க முடியும்.

❖ அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிமுறை தான் இருக்கின்றது. அது தான் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்துவதாகும்.

❖ அன்பில்லாதவன் பெற்ற உலகியல் அறிவும், ஆன்மிக ஞானமும் பயனற்றது. அவனால் கடவுளை ஒருபோதும் அடைய முடியாது.

❖ "நான் கெட்ட செயலை செய்து விட்டேன்" என்று வருந்துவதைக் காட்டிலும் அதை திருத்திக் கொள்வதே மேலானசெயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

32

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



எனினும் அராபிய எண்ணுரு முறைமையில் இந்தியக் கணிதத்தின் செல்வாக்கு இருந்ததைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.

**இந்து-அரபு எண் முறைமையில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட மாற்றம்**

அராபிய எண்ணுரு முறைமை பலவகையான ஒப்பனை வடிவத் (glyph) தொகுதிகளைப் பயன்படுத்தியுள்ளது. இந்தத் தொகுதிகளை இரண்டு முக்கிய குடும்பங்களாகப் பிரிக்கலாம். ஒன்று மேற்கு அராபிய எண்ணுருக்கள், மற்றது கிழக்கு அராபிய எண்ணுருக்கள்.

இன்றைய ஈராக் நாட்டினுள் அடங்கும் பகுதியில் ஆரம்பத்தில் வளர்ச்சி பெற்ற கிழக்கு அராபிய எண்ணு ருக்கள் "அரபு-இந்திக்" என்னும் பெயரில் கீழேயுள்ள படத்தில் (படம்-1) காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு அரபு-இந்திக் என்பது. கிழக்கு அராபிய எண்ணுருக்களின் ஒரு வகையாகும். ஸ்பெயின், மக்-

**படம்1 இந்து-அரபு எண் ஒப்பனை வடிவ மாற்றம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐரோப்பிய (மேற்கு அரபிலிருந்து மருவியது) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| அரபு-இந்திக் | ٠ | ١ | ٢ | ٣ | ٤ | ٥ | ٦ | ٧ | ٨ | ٩ |
| கிழக்கு அரபு-இந்திக் (பாரசீகமும் உருதும்) | ٠ | ١ | ٢ | ٣ | ۴ | ۵ | ۶ | ٧ | ٨ | ٩ |
| தேவநாகரி (இந்தி) | ० | १ | २ | ३ | ४ | ५ | ६ | ७ | ८ | ९ |
| தமிழ் | 0 | க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ |

ரெப் போன்ற இடங்களில் வளர்ச்சியடைந்த மேற்கு அராபிய எண்ணுருக்கள், படத்தில் "ஐரோப்பிய" என்று காட்டப்பட்டுள்ளன.

பர்மிய (Burmese), பெங்காலி (Bengali), தாய் (Thai), கெமர் (Khmer), லாவோ (Lao), திபெத்திய. மங்கோலியன் (Mongolian), மேற்கு அரபு (Western Arabic), கிழக்கு அரபு (Eastern Arabic), தேவநாகரி (Devanagari), குஜராத்தி (Gujarati), குர்முகி (Gurmukhi), ஒடியா (Odia), தமிழ். மலையாளம். தெலுங்கு. கன்னடம். ட்சோங்கா (Dzongkha), பலினீஸ் (Balinese), ஜாவானீஸ் (Javanese), ஆகிய நாடுகளிலிருந்த, இருக்கின்ற எண் முறைமைகள் இந்து-அரபு எண் முறைமையின் கீழ் அடங்கின்றன. அவை பற்றி இப்போது பார்ப்போம்.

**அராபிய எண்கள் (கிழக்கு அரபு எண்கள்)**

அரபு எண்கள் என்றும் அழைக்கப்படும் கிழக்கு அரபு எண்கள். அரேபிய தீபகற்பத்தில் உள்ள மஷ்ரிக் (அரபு உலகின் கிழக்கு) இல் அரபு எழுத்துகளுடன் இணைந்து எண்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் ஆகும். இதனை

**உரு 26A அராபிய (கிழக்கு) எண்கள்**

٠ ١ ٢ ٣ ٤ ٥ ٦ ٧ ٨ ٩

0 1 2 3 4 5 6 7 8 9

**உதாரணங்கள்** 10045 = ١٠٠٤٥


10 = ١٠ 25 = ٢٥ 713 = ٧١٣

உரு 26 A காட்டுகிறது.

**பர்மிய எண் முறைமை (11 ஆம் நூற்றாண்டு)**

பர்மிய எண்கள் என்பது பர்மிய மொழியில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் எண்களின் தொகுப்பாகும். இருப்பினும் அரபு எண் களே பயன்படுத்தப்படுகின்றன. பர்மிய எண்கள் உலகின் பிற பகுதிகளில் பொதுவாகப் பயன் படுத்தப்படும். இது இந்து-அரபு எண் முறையைப் போன்றது. இதனை உரு 26 B காட்டுகிறது.

**பர்மிய (மியன்மார்) நாணயத்தாள்**



**உரு26B பர்மிய எண் முறைமை**

| ၀ | ၁ | ၂ | ၃ | ၄ | ၅ | ၆ | ၇ | ၈ | ၉ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| ၁၀ | ၁၀၀ | ၁၀၀၀ | ၁၀၀၀၀ |
|---|---|---|---|
| 10 | 100 | 1000 | 10000 |

**உதாரணங்கள்**

| ၃၅၈ | ၆၂၄ | ၂၃၅၉ |
|---|---|---|
| 358 | 624 | 2359 |

**பெங்காலி எண் முறைமை (கி.மு. 1400 ஆண்டுகள்)**

பெங்காலி எண்கள் என்பது இந்திய துணைக் கண்டத்தில் இருந்து உருவான எண்கணித அமைப்பின் அலகுகளாகும்.

அவை பெங்காலி, சில்ஹெட்டி, சிட்டகோனியன், அசாமி, பிஷ்ணுபிரியா மணிப்பூரி, சக்மா, ஹாஜோங் இடங்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள 350 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படுகின்றன (மக்கள்

**உரு 27 பெங்காலி எண் முறைமை**

| ০ | ১ | ২ | ৩ | ৪ | ৫ |
|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 |

| ৬ | ৭ | ৮ | ৯ | ১০ |
|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 | 10 |

**உதாரணங்கள்**

| ১০০ | ২০০০ | ৯০১০ |
|---|---|---|
| 100 | 2000 | 9010 |

தொகையில் 5 % இற்கும் அதிகமானோர்), மேலும் அவை இந்து-அரபு எண் முறையை ஒத்தது. உரு 27 ஐப்பார்க்கவும்.

**தாய் எண்கள் (Thai numerals) (கி.பி.7 ஆம் நூற்றாண்டு)**

தாய் எண்கள் என்பது தாய்லாந்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் எண்களின் தொகுப்பாகும். இருப்பினும் நவீன ரட்டனகோசின் காலத்தில் (modern Rattanakosin period) தாய்லாந்தின் விரிவான மேற்கத்திய மயமாக்கல் காரணமாக இந்து-அரபு எண்கள் மிகவும் பொதுவானவை.

உலகின் பிற பகுதிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இந்து-அரபு எண் முறையை தாய் எண்கள் பின்பற்றுகின்றன. இதனை உரு 28 இல் காட்டப்பட்ட உதாரணம் ஊடாக விளங்கிக் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 பேர்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,641 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஒமிக்ரோன்...

வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பிரித்தானியாவில் உயிரிழந்துள்ளார்.

ஒமிக்ரோனால் பதிவான முதல் மரணமாக இது உள்ளது.

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நோயாளியின் முதல் இறப்பு பதிவானதாக பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நேற்று தெரிவித்தார். (ம)

## உரும்பிராயில்...

கப்பட்டுள்ளதாக, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் இந்திரன் சஞ்சீவன் (வயது - 20) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-33,104)

## வடமராட்சி...

பருத்தித்துறையைச் சேர்ந்த 19 வயதான தர்ஷன் என தெரியவந்துள்ளது.

மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது - 28) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவரும் காணாமல் போயுள்ளார். அவரை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறையைச் சேர்ந்த தூண்டல் தொழிலாளர்கள் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு படகில் பயணித்துள்ளனர்.

மன்னார் - பள்ளிமுனை கடற்பகுதியில் இயந்திரம் பழுதானமையால் ஒருவர் கடலில் இறங்கி சரிபார்த்துள்ளார்.

இதன்போது அவரைக் கடல் நீர் இழுத்துச் சென்றது. இவ்வாறு நீரில் இழுத்துச் சென்ற நபரைக் காப்பாற்ற இறங்கியவரையும் கடல் நீர் இழுத்துச் சென்றுள்ளது.

ஒரு மீனவரின் சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-18,33)

## 3 பிள்ளைகளின்...

யாழ்ப்பாணம் - அராலி வீதி, வசந்தபுரத்தைச் சேர்ந்த கண்ணன் பத்மலோஜினி (வயது - 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

"6 நாட்களாக காய்ச்சல் இருந்துள்ளது. அவர் தனியார் கிளினிக்கில் மருத்துவ ஆலோசனையுடன் மாத்திரைகளைப் பெற்றுள்ளார். அவர் மூச்சுத் திணறலுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு சேர்க்கப்பட்டார்.

எனினும் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்றுள்ளமையை உறுதிப்படுத்தி நேற்று மாலை பரிசோதனை அறிக்கையிடப்பட்டுள்ளது" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த குடும்பப்பெண் கோவிட்-19 தடுப்பூசியின் முழுமையான அளவைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் சுகாதார விதிமுறைகளின் அடிப்படையில் தகனம் செய்யப்படவுள்ளது. (ம-18,33)

## பூஸ்டர் தடுப்பூசி...

தர் ஒருவர் சில மணி நேரத்தில் மரணமடைந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனைக்கு பின்னரே மரணத்திற்கான காரணம் தெரிய வரும் என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மகாஇறம்பைக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஏற்கெனவே சினோபார்ம் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றைய தினம் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றிருந்ததுடன், சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய தடுப்பூசி ஏற்றியபின் சிறிது நேரம் அவ்விடத்தில் அமர்ந்து இருந்துவிட்டு துவிச்சக்கரவண்டியில் வீடு நோக்கி சென்றுள்ளார்.

வீடு சென்று சில மணி நேரத்தில் திடீரென குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவரது சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவர் ஏற்கனவே சில நோய்களுக்கு உட்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, காத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அவரது சடலத்திற்கு தற்போது பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மரணத்திற்கான காரணம் குறித்து அறிந்துகொள்ள அவரது சடலத்தை உடனடியாக உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-250)

## நான்காவது தடுப்...

ரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, பொதுமக்கள் கோவிட் தடுப்பூசி அட்டையை இயன்றளவு கவனமாக பயன்படுத்த வேண்டும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி அட்டையை தரவு களஞ்சியத்திற்கு உள்வாங்கி, QR கோட் முறைமைக்குள் இணைத்து, சில சந்தர்ப்பங்களில், கைத்தொலைபேசி ஊடாகவோ அல்லது வேறு முறைமையிலோ பயன்படுத்தும் வரையில், அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கட்டாயமாகும்.

எதிர்காலத்தில் மூன்றாம் தடுப்பூசியின் பின்னர், நான்காம் தடுப்பூசியையும் வழங்கவேண்டி ஏற்படலாம்.

அதற்காக தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதை தவிர்க்க வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (ம)

## பாரா...

மன்றத்தை ஒத்திவைப்பது தொடர்பான அதிசிறப்பு அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு 2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வன...

மன்னார் மேற்குப் பகுதியில் வனவளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பகுதிக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகள் காணி அளவிடுவதற்காக சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு ஒன்றுகூடிய குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக காணி அளவிடும் பணிகளை கைவிட்டு அங்கிருந்து செல்ல வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வனவளத் திணைக்களத்தினருக்கும் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலினைத் தொடர்ந்து வனவளத்திணைக்களத்தினர் காணி அளவீட்டு பணிகளை கைவிட்டு அங்கிருந்து சென்றுள்ளதாக அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார். (ம-285)

## மதில் விழுந்து இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

(பதுளை)

பதுளை, தியத்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கல்லூரியில், பழைய மதிலொன்றை உடைப்பதற்கு முயற்சித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மதில் விழுந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மடுல்சீமை பிரதேசத்தை சேர்ந்த 37 வயது இராணுவச் சிப்பாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம)


தன நிதானய
திகதி 2021.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 645
Z 21 54 69 82

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2910
Z 30 59 71 75

மஹஜன சம்பத
திகதி 2021/12/13
சீட்டிழுப்பு இலக்கம் 4615
Y 3 9 5 2 4 7

மெகா பவர்
திகதி 13/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0963
Q 10 17 20 64 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1181
0 6 4 9 8 7

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல. 1418
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,458,980
சீட்டிழுப்பு திகதி 13.12.2021
வெற்றி இலக்கங்கள் 26 56 70 75 Z

சனிதா
சீட்டிழுப்பு இல. 3753
சீட்டிழுப்பு திகதி 13.12.2021
ரூ. 3,889,000
வெற்றி இலக்கங்கள் 07 36 41 62 N

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1592
சீட்டிழுப்பு திகதி 13.12.2021
B 16 20 26 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 74,586,743/=

ரூசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,355,906/=
திகதி 13.12.2021
வெற்றி வாரம் 3304
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 32 34 43
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,565,400/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1793
சீட்டிழுப்பு திகதி 13.12.2021
வெற்றி இலக்கங்கள் 10 33 47 59 U
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,867,628/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி தேவை

யாழ். மாநகர சபை அல்லது நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் குடியிருப்பு தேவைக்கு 2 பரப்பிற்கு மேற்படாத காணி தேவை. (9019)

**077 208 6789**


# சபையை நிறைவு செய்ததற்கு மறைமுக காரணம் இருக்கலாம்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத்தொடரை நிறைவு செய்தமைக்கு பின்னால் ஏதாவது மறைமுக காரணம்இருக்கவேண்டும்.

என்ன காரணம் என்பது தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) வின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியலமைப்பில் தனக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய பாராளுமன்ற அமர்வை நிறுத்தி வெளியிட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய பாராளுமன்ற அமர்வை நிறுத்தி புதிய அமர்வை கூட்டமுடியும்.

அதனடிப்படையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஜனாதிபதியால் நிறைவுறுத்தப்பட்டிருக்கின்றது.

புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி கூட்டப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9062)

**076 825 7716 (ஆகாஸ்)**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(Lanka Farm அருகாமையில்)

1 பரப்பின் விலை 12 இலட்சம் (9061)

**077 658 5999, 077 623 4204**

## விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

**Lanka Cargo Worldwide Express**

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (9056)

021 221 1995
076 283 2397

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனகர் வளவு 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9048)

தொடர்புகளுக்கு

**077 814 7389, 070 705 1655**

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம் மற்றும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்த வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு (C-3251)

**077 154 1906**

## யாழ். நகரப் பகுதிகளில் காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க

- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (பிரபல்யமான இடத்தில்)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு
- யாழ். திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள்
- பலாலி வீதி கந்தர்மடத்தில் 1 1/2 பரப்பு காணி
- K.K.S வீதியில் 1 1/2 பரப்பு காணியுடன் கடை
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு
- யாழ். கைதடி A9 வீதியில் 14 பரப்புக் காணி
- யாழ். சத்திரத்துச் சந்தி கொட்டடி வீதியில் 3 பரப்பு காணி

உடன் விற்பனைக்கு உண்டு.

இலங்கையில் எப்பாகத்திலும் கடைகள், காணிகள், வீடுகள் வாங்கவும் விற்கவும். (9059)

தொடர்பு

VIMB, வங்களாவடி, வேலணை.

**077 522 1132**
**076 106 9458**

## வீட்டு வேலையாட்கள் தேவை

வீட்டு வேலை, வயோதிபர் பராமரிப்பு வேலைகள் செய்யக்கூடிய பெண் வேலையாட்கள் தேவை. (தங்கி நிற்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.) (9040)

**077 773 3368**

## காணி தேவை

யாழ். நகர பகுதியில் வியாபார நோக்கத்திற்குரியதான (Commercial Purpose Land) 3-4 பரப்பளவுடைய காணி தேவை. (9022)

**076 928 9784**

## கனடாவில் வேலைவாய்ப்பு

WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA / DEGREE ஆங்கில அறிவு (C-3237)

அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

**0777-068-777**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3215)

**0768226240** DHL


## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.11.2021 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வயிரமுத்து கோவிந்தபிள்ளை

( ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம் )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 17.12.2021 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ். இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெறும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

எமது குடும்பத் தலைவரை இழந்து தவித்த வேளைகளில் எமக்கு கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பனர்கள் வெளியிட்டு ஆறுதல்படுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்து கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (9055)

இல. 158, பொற்பதி வீதி, கோண்டாவில்.

மனைவி, மக்கள்


NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

## பணிநிலை வேண்டுகை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கும் கடதாசி தொழிற்சாலையில் பணியாற்றுவதற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### 01. உதவி இயந்திர இயக்குனர்கள் (பயிலுனர்)

- தொழில்நுட்ப கல்லூரியில் இயந்திரவியல் பாடநெறி கற்றிருத்தல் மேலதிக தகுதியாக கருதப்படும்.
- சாதாரண தரத்தில் சித்தி (6 பாடம்)

### 02. தொழிற்சாலை உதவியாளர் (Helper)

- தொழிற்சாலைகளில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகுதியாய் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு**

1. தகுதிக்கேற்ப சம்பளமும் வரவுப்படி, உற்பத்திப்படி என்பனவும் வழங்கப்படும்.
2. தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கான உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பணிநிலைகளுக்கு**

விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையுடன் கைத்தொழில் பேட்டையில் அமைந்திருக்கும் தொழிற்சாலை அலுவலகத்திற்கு 15ஆம் திகதி முதல் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

(9051)

நிர்வாகம்

☎-076 141 9329


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] அவர்களது அச்சகத்தில் 14.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org